
திருவாசகம் - 11
திருத்தெள்ளேணம் கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

மாணிக்கவாசகர் தனது எண்ணங்களைப் பெண்கள் விளையாடும் விளையாட்டுக்கள் மூலம் வெளிப்படுத்துவார். விளையாட்டு மனதிற்கு மகிழ்வைத்தரும். தேவையில்லாத சிந்தனைகளை அகற்றும். கூடிவாழச் செய்யும். புரிந்துணர்வை உண்டாக்கும். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள் விளையாட்டின் மூலம் சைவநெறியைக் கூறுகிறார். குறிப்பாகச் சிவனின் மகிமைகளையும், பெருமைகளையும் கூறுகிறார். பெண்களூடாகச் சொல்வது மற்றவர்களுக்குப் புரியும் என்று நினைக்கிறார். அருமையான தத்துவங்களை மிக மிக இலகுவாக்கிக் கூறுவதால் தான் திருவாசகத்தைத் தேன் என்றனரோ தெரியவில்லை. திருவாசகத்தை வாசிப்போரின் தொகை மிகமிக அதிகரித்துள்ளமை மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

நன்றி.

அன்புடன்

கே.வி.குணசேகரன்

உ

சிவமயம்

# திருத்தெள்ளேணம்

## தில்லையில் அருளியது - நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை**

**உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்.**

**ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்**

**திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 01**

பெரும் வர்த்தகரான சிவராசா கதிரேசனது வீட்டுவந்து வெளியே அடியார்கள் தங்குவதற்காப் போடப்பட்டிருந்த சிறிய கொட்டகைக்குள் இருக்க, அவரைக் கண்ட கதிரேசனது வீட்டுச் சமையல்காரனான கந்தவனம் அவரின் அருகில் வந்து அவரை அழைத்துச் சென்று உள்ளே அமர்த்திவிட்டு, "ஐயா, சிவபூசை செய்கிறார்; அமருங்கள் வந்திடுவார்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

சிவராசா நினைத்தார்; "நானும் சிவபக்தன், நான் முடிந்தளவான தர்மங்கள் செய்கின்றேன். அப்படி இருந்தும் கதிரேசனைத்தான் மக்கள் மதிக்கிறார்கள். அவர் சொன்னதுதான் நடைபெறுகிறது. பெரும் பணக்காரர்களும், உயர்ந்த உத்தியோகத்தர்களும், சிவனடியார்களும் அவரைச் சிவன் என்று சொல்லி வணங்குகிறார்கள். இது ஏன்…? சிவன் பக்கச்சார்புடையவனா….?" என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது கதிரேசன் வந்தார். ஓலைக்கொட்டகைக்குள் இருந்தவர்கள் எழுந்து வணங்கினர். சிவராசாவுக்கு எழுந்து வணங்க விருப்பமில்லை. சிரமப்பட்டு எழ முயற்சிக்க, "வேண்டாம், வேண்டாம் உட்காருங்கள்" என்றார் கதிரேசன்.

சில நிமிடங்கள் யாரும் பேசவில்லை. பின் சிவராசா சொன்னார்; "நான் சிவனை வணங்குபவன். தான தர்மங்கள் செய்பவன். தனவந்தன். இவையெல்லாம் உங்களுக்குத் தெரியும். எனக்கு ஒரேயொரு மகள் முப்பது வயது கடந்தும் திருமணமாகாது இருக்கிறாள். மயில்வாகனம் விவசாயி. அவனுக்கு ஐந்து பொம்பிளைப் பிள்ளைகள். அதில் இரண்டு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட்டான்.

அவன் கோவிலுக்கு வந்து வணங்குவது மட்டும்தான். தானதர்மம்கூடச் செய்வதில்லை. ஏன் இந்த நிலை” என்று கவலையோடு கேட்டான்.

“சிவராசா, மாணிக்கவாசகர் சொல்கிறார்; “திருமால் பன்றி உருவம் எடுத்து பூமியைப் பிளந்து சென்றும் சிவனது திருவடியைக் காணவில்லை. ஆனால் நான் எதுவும் செய்யாது இருந்தபோது ஒரு அந்தணன் உருவத்தில் வந்து என்னை ஆட்கொண்டாய். அப்படியான சிவனை நான் ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி தெள்ளேணம் கொட்டுவேன்” என்கிறார். தெள்ளேணம் என்பது கன்னிப் பெண்கள் மிக்க மகிழ்வுடன் விளையாடும் ஒரு விளையாட்டு. நீ சிவபக்தன் தான். தானதர்மம் செய்பவன் தான். ஆனால் திருமாலைப்போல அகம்பாவம் மிக்கவன். நான்தான் பெரியவன் என்று நினைப்பவன். உனது மகள் காயத்திரி உனது வீட்டில் வேலை செய்யும் காமாட்சியை மதிக்காதவள். ஐம்பது வயதான அவளுக்கு அடிப்பவள். காமாட்சி பெரும் சிவபக்தை. அவள் தினமும் உனது மகள் பேசும் பேச்சை எண்ணி வருந்துவாள். அதைச் சிவனுக்குச் சொல்வாள். சிவபக்தரானாலும் அகந்தை உள்ளவர்களைச் சிவன் திரும்பிக்கூடப் பாரான். அதுதான் திருமாலுக்கு நடந்தது. இது தேவர்களிடையே நடந்த கதை கற்பனை என்று நினைக்கலாம். ஆனால் அதன் உட்பொருள் வாழ்க்கையைப் புலப்படுத்துவது. அவற்றைப் படிப்போர் அதன் உட்பொருளை உணர்வதில்லை. அதனால் தான் துன்பப்படுகின்றனர். நீ மயில்வாகனத்தின் மீது பொறாமைப்படுகிறாய். அதுவும் உனது பிரார்த்தனையைக் குலைக்கிறது. எதைப்பற்றியும் கவலைப்படாது சிவவாழ்வு வாழ்வோரைத்தான் சிவன் விரும்புவான்” என்றார் கதிரேசன்.

**திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்**

**கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை**

**அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவும்**

**திருவாரூர் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 02**

“சிவராசா, வாழ்க்கைக்குரிய தத்துவங்களை மிக அழகாகவும், தெளிவாகவும் கூறியவர் மாணிக்கவாசக சுவாமியார். அதனால் நீ திருவாசகத்தைப் பொருளுணர்ந்து படி. அவர் சொல்கிறார்; “திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் எனது பிறவியை வேர் அறுத்தவர். அதனால்தான் அவரையன்றி வேறு யாரையும் காண்பதில்லை. அவன் அருவாகவும், உருவாகவும் இருக்கின்றான். திருவாரூர் அவனுக்கு விருப்பமான தலம். அதனால் அவனைப் புகழ்ந்து பாடி நாம் தெள்ளேணம்

கொட்டுவோம்” என்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது. சிவனை முழுஅன்போடு வணங்குபவர்கள் சிவநினைவாகவே இருப்பர். சிவனைப்பற்றியே கதைப்பர். சிவனடியார்களைச் சிவனென நினைப்பர். சிவனடியார்கள் காவி உடை தரிக்க வேண்டியதில்லை. சடைவளர்க்கத் தேவையில்லை. முடியை மழிக்கவும் தேவையில்லை. நல்ல வேட்டியை உடுக்கலாம். அது பட்டுவேட்டியாகவும் இருக்கலாம். உனது வீட்டுக்கு ஒரு சிவனடியார் அண்மையில் பட்டு வேட்டியோடு வந்து உணவு கேட்க, நீ அவரை வாயில்வந்தபடி பேசி அனுப்பினாய். அவர் எனது வீட்டுக்கு வந்தபோது அவரை இருத்தி அவருக்கு உணவு படைத்தேன். பின் ஏதாவது தேவையானால் கேளுங்கள்” என்றேன்.

“மகனே, சிவனடியார்கள் சிவனைப்போல இரந்துண்பவர்கள். நான் ஓர் ஏழையின் வீட்டுக்குக் கந்தல்துணியோடு சென்றபோது அந்த ஏழை இந்தத் துணியைக் கொடுத்துவிட்டுச் சொன்னான்; “சிவனின் அடியவரே, உங்களது உடையைப் பார்க்கத் துன்பமாக உள்ளது. என்னிடம் விசேடங்களுக்குக் கட்டும் ஒரு பட்டுவேட்டியுண்டு. அதைத் தந்தால் கட்டுவீர்களா” என்று கேட்டான். நான் எதுவும் சொல்லவில்லை. விரும்பினால் கட்டுங்கள். இது நான் கட்டிய வேட்டி என்று சொன்னான். அதைக் கட்டிக்கொண்டு சென்றபோது ஒருவர் என்னை மிகவும் கேவலமாக ஏசினார். அதனால் அதைத் தந்தவனிடம் கொடுத்துவிட்டு நான் உடுத்த பழம் வேட்டியுடன் வருகிறேன்” என்றார். நான் அவருக்கு ஒரு வேட்டி கொடுத்தேன். மறுநாள் வேட்டியைக் கொடுத்த சுந்தரம் என்றவன் வந்து தனக்குப் பெருந்தொகைப் பணம் தந்து உடுபிடவைகள் வாங்கு என்றாராம். அதனால் சுந்தரம் திகைத்துப் போனான். இது சிவனது திருவிளையாடல். ஒருவனது நடத்தையை ஓரிரு விடயங்களைக் கொண்டு தீர்மானித்தலாகாது. சிவ நினைவோடு வாழ்பவன் எல்லாம் சிவச்செயல் என்று நினைப்பான். நீ சிவச்செயலையும் அவச்செயல் என்று நினைப்பாய். நீ நான்கு வார்த்தைகள்பேச உனது மகள் பத்து வார்த்தைகள் பேசியிருக்கிறாள். பிறகு எப்படி சிவனருள் உங்களுக்குக் கிடைக்கும். மனதில் சிவனிருந்தால் பேசும் வார்த்தைகளில் அன்பிருக்கும். ஒன்றைத் தீர்மானிக்குமுன் மனம் சிவனை நாடும். அன்புள்ள இடத்தில் தான் சிவன் இருப்பான்” என்றார் கதிரேசன்.

**அரிக்கும் பிரமர்க்கும் அல்லாத தேவர்கட்கும்**
**தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை**
**உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டுலகமெல்லாம்**
**சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 03**

“சிவராசா, சிவனின் செயல் இப்படித்தான் இருக்கும். என்று யாராலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. யமன் தான் வந்தாலும், கூத்றவன் சிவன் என்று நினைத்தால் துன்பம் வராது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “திருமால் பிரமன் முதலிய தேவர்களே சிவனின் பெருமைகளை உள்ளபடி உணர்ந்து கொள்ளவில்லை. அத்தகையவன் என்னை வலிய வந்து ஆட்கொண்டு மனமுருகப் பண்ணினான். சிவனின் செயல் இப்படி இருக்கிறதா என்று உலகத்தவர் வியப்படைகின்றனர். அதை நாம் தெள்ளேணம் கொட்டுவோம்” என்கிறார். நீ இங்கு வந்தவுடன் சொன்னாய். மயில்வாகனத்திற்கு ஐந்து பெண்பிள்ளைகள். அதில் இரண்டு நல்ல இடத்தில் திருமணம் முடித்து விட்டது. எனக்குள்ளது ஒரு பிள்ளை. அது திருமணவயது கடந்தும் குமராக இருக்கிறது என்றாய். மயில்வாகனம் பரம ஏழை. ஆனால் அவன் யாரையாவது பார்த்துப் பொறாமைப்பட்டானா….? அல்லது மதிப்புக் குறைவாகப் பேசினானா இல்லையே. அவனது மகள் சாந்தினி. பெரும் சிவபக்தை. உயிர்கள் மீது பேரன்பு கொண்டவள். யாருக்கும் தகுதி தராதரம் பார்க்காது உதவி செய்பவள். பட்டாதாரி. ஒரு நாள் வீதியால் சென்ற வயோதிபர் ஒருவர் தலைச்சுற்றுக் காரணமாக வீதியில் விழுந்து விட்டார். அவரைத் தூக்கி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பகல் முழுவதும் அவரோடு இருந்து பணிவிடை செய்து விசாரித்து அவர் யாரென அறிந்து வீட்டாருக்கு அறிவித்து அவர்கள் வந்த பின்புதான் அவள் தனது வீட்டுக்குச் சென்றவள். அதன்பின் வைத்தியசாலையில் அவர் ஐந்து தினங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றபோது அவள் அடிக்கடி சென்று அவரைப் பார்த்தாள். அதனால் அந்தக் குடும்பம் அவளைத் தமது குடும்பத்தில் உள்ள ஒருத்தியாகக் கருதியது. அந்தப் பெரியவர்; “பெற்ற பிள்ளைகளைவிட தன்னை மேலாகப் பார்த்தவர்” என்று சொல்வார். விடுமுறைக்கு வந்த வெளிநாட்டில் பணிபுரியும் அவரது மகன் அவளை விரும்பித் திருமணம் செய்தான். இது சிவனது அருள். அன்பு செய்பவரை அறிபவன் சிவன் என்று திருமந்திரம் கூறுகிறது. சிவத்திற்கு உருவமில்லை. அன்புதான் சிவம். இதை யாரும் உணர்கிறார்களில்லை. உணர்ந்தவர் சாந்தினியைப்போல பேரின்ப வாழ்வு வாழ்வர்” என்றார் கதிரேசன்.

**அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே**

**பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி**

**நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து**

**சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 04**

“நீ தேவர்களைப்போல ஆடம்பரமாகவும், ஆணவத்துடனும் வாழ்கிறாய். அதனால் நீ யாரையும் மதிப்பதில்லை. கோவிலுக்குச் சென்று அதிக பணம் செலவு

செய்வதால், பூசகரும் கோவில் நிர்வாகமும் உனக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று நினைக்கிறாய். பணத்தைச் செலவு செய்வது வேறு. அதனால் பயனடைவது வேறு. மயில்வாகனத்தின் மீதுள்ள பொறாமையால் அவன் செய்த உனது வயலை அவனிடமிருந்து பெற்றுப் பெரும்பணம் செலவு செய்து விதைத்தாய். உனக்கு வேலைகள் அதிகம். அதனால் அதைச் சரிவரக் கவனிக்கவில்லை. அத்துடன் வயல் வேலைகளைப்பற்றி உனக்கு எதுவும் தெரியாது. விளைந்த நெல்லை அறுவடை செய்திருத்தல் வேண்டும். நீ அதில் சரியான கவனம் செலுத்தமையால் குருவிகள் வயலை அழித்து விட்டன. அத்துடன் மழையும் பெய்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது. பணம் செலவு செய்வதைவிட உரிய நேரங்களில் உரியவற்றைச் செய்ய வேண்டும் என்று தெரியவில்லையா…? நீ பூசகருக்கு அதிக உதவி செய்வாய். பின் அதிகார தோரணையில் ஆணையிடுவாய். அது அவருக்குப் பிடிப்பதில்லை. மயில்வாகனம் தான் சிவனின் அடிமை என்று நினைத்துச் செயற்படுவதால் பூசகரில் இருந்து கோவில் வாழும் மிருகங்கள்கூட அவரை மதிக்கின்றன. தேவர்களான பிரமா, விட்டுணு, இந்திரன் போன்றவர்களது உயர்ந்த பதவிகளும் ஞானநிலைக்குக் கீழானவை. அதனால் தான் அவர்கள் அடிக்கடி பெரும் துன்பத்துக்காளாயினர். இருந்தும் அவர்கள் உணர்வதாக இல்லை. எந்தச் சிறுசெயலும் பிறவியை வளர்ப்பது; “பிறவி என்ற மாயையில் இருந்து என்னைக் காத்து, நினைத்தற்கரிய தனது ஆத்மஜோதியை எனக்குக் காட்டி எனது சீவபோதத்தை ஒழித்து சிவபோதத்தை எனக்களித்த சிவனை நினைத்து தெள்ளேணம் கொட்டுவோம்” என்று பெண்களுக்குக் கூறுகிறார் மாணிக்கவாசகர். உனக்கு சீவபோதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதனால் உன்னைத் தவிரப் பெரியவன் யாருமில்லை என்று நினைக்கிறாய். கருணாகரனின் மகன் ஆதவனைக் கல்யாணத்தரகர் உனது மகளுக்குத் திருமணம் பேசிவந்தபோது அவர்களது ஏழ்மையை நீ பரிகசித்தாய். உனது மகள், “பிச்சைக்காரக்குடும்பத்தில் மாப்பிள்ளை எடுக்க எனக்கு விருப்பமில்லை” என்றவள். இதை அறிந்த பலர் உனது மகளைத் திருமணம் செய்ய விரும்பவில்லை. எல்லோரும் வறியவர்களாக இருந்துதான் வசதியானவர்களாக மாறியவர்கள். உனது மூத்த சகோதரிக்கு ஏராளமான காணி, பூமி பணம் கொடுத்து உயர்ந்த உத்தியோகத்தனைச் செய்து வைத்தாய். அவன் குடித்துக் குடித்துச் சொத்தையும் அழித்து தன்னையும் அழித்துவிட்டான். நல்லமுறையில் வாழ்ந்த அவன் தீயவனாவதற்கு நீ தான் காரணம். திருமணம் செய்து கொடுத்தால் அக்குடும்பத்தை மகிழ்வுடன் வாழ விடவேண்டும். நீ எல்லா விடயங்களிலும் தலையிட்டதால் தான் அவன் குடிக்கத் தொடங்கியவன். உனது சீவபோத்தை அகற்றச் சிவனை எந்த நினைவும் இல்லாமல் தொழு” என்றார் கதிரேசன்.

**அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்**

**உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்**

**கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த**

**திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 05**

“சிவராசா, சிவன் மனிதனுக்கு அந்நியப்பட்டவன் என்றும், அடைய முடியாதவன் என்றும், மேலானவன் என்றும் பலர் நினைக்கின்றனர். சிலர் சிவனுக்குப் பூசைகள், ஆராதனைகள் செய்தால் வசப்பட்டு விடுவன் என்று நினைக்கின்றனர். சிவன் அந்நியப்பட்டவன் அல்ல. கூடவே இருப்பவன். கூடித்திரிபவன். தேவர்களுக்கும் தேவர்களைப்போல ஆணவமுள்ளவனுக்கும் அகப்படாத மேலானவன். அன்பு செலுத்துவாருக்கு அடியவனானவன். அதனால்தான் மாணிக்கவாசகசுவாமிகள், “பெருமைக்குரிய பிரமாவுக்கும் திருமாலுக்கும் தரிசனத்திற்கு எட்டாத சிவன், மக்களை மகிழ்விப்பதற்காக மானுட வடிவமெடுத்து வந்து தனது அருட்சக்தியால் எனது பிறவி என்ற வித்தை எரித்து சாம்பராக்கினான். அதனால் எனது உள்ளம் அவனது ஆலயமாகிவிட்டது. இச் சிறப்பைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்” என்கிறார்.

தூய்மையான உள்ளத்தைச் சிவன் தனது ஆலயமாக்கி, அதனுள் மகிழ்வுடன் இருப்பான். அவன் பாகுபாடு காட்டுவதில்லை. சாதிவேறுபாடு பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் மனதைச் சுத்தமாக வைத்திருந்து அவனை ஒரு பூப்போட்டு ஆராதித்தால் அவன் வசமாகி விடுவான். இதைத் தெரியாத உன்போன்றவர்கள் பெரும் செலவு செய்து பூசைகளைச் செய்துவிட்டு ஆணவம் மிக்கவர்களாக வாழ்கின்றனர். மயில்வாகனத்தோடு கதைத்துப் பார்; “ஐயா, என்னாலாவது எதுவுமில்லை. அதனால் எனது மனதைத்தான் கொடுத்துள்ளேன். மனதுள் அவனுக்குப் படையல் படைப்பேன். பூசகர் தீபங்காட்டும்போது அதை எனது செயலாக நினைப்பேன். தொண்டுதுரவுகள் செய்வேன். எந்நேரமும் அவனின் நினைவாகவே இருப்பேன். நான் எனது இரண்டு மகள்களுக்கும் திருமணம் பேசவில்லை. சிவன் பேசிச் செய்தான். அவர்கள் சிவநினைவோடு வாழ்கிறார்கள். எனது மூன்றாவது மகளுக்கு அமெரிக்க அரசு புலமைப்பரிசில் வழங்கி வேலையும் கொடுத்துள்ளது. காலையில் தான் கடிதம் வந்தது என்று மயில்வாகனமும் அவனது மூன்றாவது மகளும் வந்து எனக்குச் சொன்னார்கள். நாம் எதையும் செய்யத் தேவையில்லை. சுத்தமான மனதுடன் அவனை வணங்கினால் போதும். அவன் செய்யவேண்டியவற்றைச் செய்வான். அசுத்தமானவற்றைப் பன்றிகள்தான் விரும்பும். பசுக்கள் விரும்பமாட்டாது. நீ பசுவாக மாறு. எல்லாம் நல்லபடி நடக்கும். சிவன் மாணிக்கவாசகரைத் தான் தேடிச் சென்றவனல்ல. பல அடியார்களை அவன் தேடிச் சென்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. அது பொய் என்று நீ நினைத்தால்

மயில்வாகனத்தைப் பார். அதையும் நீ புரியாவிட்டால் எதுவும் நடவாது" என்றார் கதிரேசன்.

**அரையாடு நாகம் அசைந்தபின் அவனியின்மேல்**
**வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்**
**உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்**
**திரயாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 06**

"சிவராசா, மாணிக்கவாசக சுவாமிகள்; "இடுப்பிலே படமெடுத்தாடும் பாம்பைக் கச்சையாகக் கட்டிய எம்பிரானான உமாமகேசுவரன் பூமிக்கு என்னை ஆட்கொள்வதற்காக வந்தருளினான். அதை என்னால் விளக்க முடியவில்லை. சொற்கள் தடுமாறுகின்றன. உள்ளொளி பெருகுகிறது. ஒளிவீசும் பெரிய கண்களில் நீர் சுரக்கிறது. இதைப்பாடித் தெள்ளேணம் கொட்டுகிறேன்" என்கிறார். யோசித்துப்பார். தேவருலகில் வாழும் தேவர்களுக்கு எட்டாத சிவபெருமான் மனிதர்களின் அன்பால் கவரப்பட்டுப் பூமிக்கு இறங்கிவந்து அவர்களை அருளி ஆட்கொள்கிறான். சிவ நினைவைத்தவிர வேறெந்த நினைவும் இல்லாமல் சிவனை வணங்கிப்பார். அருகில் நடப்பவை எதுவும் தெரியாது, அவனைக் கண்டதும் நா பேசமறுக்கும். கண்கள் கலங்கி உலகை மறைக்கும். தன்நிலையை உணர முடியாது. அப்படி இப்போ யார் வணங்குகிறார்கள். வணங்கும்போது பல நினைவுகள் மனதில் எழும். இனிப்புப் பண்டத்தையும், புளிப்புப் பண்டத்தையும், உறைப்புப் பண்டத்தையும் ஒன்றாக உண்டுபார் சுவை தெரியாது. அதுபோல வணங்கும்போது நினைவுகள் மாறுபட்டால் சிவனைத் தெரியாது. இதனால்தான் தேவர்களாலும், பல மனிதர்களாலும் சிவனைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆசைகள் அடங்கினால் மனம் அடங்கும். மனம் அடங்கினால் பொறிகள் அடங்கும். அதனால் மனத்தை அடக்கிய பின்பே கடவுளை வணங்குதல் வேண்டும். மனம் மதம் கொண்ட யானையைப் போன்று சொற் பேச்சுக் கேளாது." என்றார் கதிரேசன்.

**ஆவா அரிஅயன் இந்திரன் வானோர்க் கரியசிவன்**
**வாவாவென் றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு**
**கொண்டான் பூவார் அடிச்சுவ டென்தலைமேற் பொறித்தலுமே**
**தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 06**

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது அங்கே மயில்வாகனம் வந்தான். அவன் கதிரேசனோடு சிவராசா பேசிக் கொண்டிருந்ததைக் கவனிக்கவில்லை; “ஐயா, மாணிக்கவாசகர் சொன்னது உங்களுக்குத் தெரியும். ஆச்சிரமத்திற்கு வருவோரில் பலர் தமது துன்பங்களைச் சொல்லத்தான் வருகிறார்கள். அங்கு சொல்வதை யாரும் புரிந்து கொள்வதில்லை. விண்ணவர்கள் போற்றித் தொழுதாலும் அவர்களின் பொய்யான தொழுகையை அறிந்த எம்பெருமானான சிவபெருமான், என்னை வலியவந்து பூவுலகில் ஆட்கொண்டான். மலர் போன்ற தனது திருவடியை எனது தலைமீது வைத்ததும் நான் தெய்வத்தன்மையை அடையப் பெற்றேன். அதற்காக நான் தெள்ளேணம் கொட்டப் போகிறேன்” என்கிறார். அவர் ஏனையோரைப் போலவே பொங்கிப் படைக்கப் போகிறேன். கோபுரங் கட்டப் போகிறேன். அபிடேகம் செய்யப் போகிறேன் என்று சொல்லவில்லை. மனதில் மிக்க மகிழ்வுடன் ஆடிப்பாடித் தெள்ளேணம் என்ற விளையாட்டை விளையாடப் போகிறேன். என்று சொல்கிறார். இது ஏன்?” என்று கேட்டான் மயில்வாகனம்.

“ஒருவன் தன்னை மறந்த நிலையில் ஆடுவது உரு ஆட்டம் என்பர். தன் நிலையை மறக்காது சிவநினைவுடன் ஆடிப் பாடுவது தெள்ளோணம் என்னும் விளையாட்டு. சிவன் பேரின்பப்பிரியன். தானும் மகிழ்வுடன் இருந்து மக்களும் மகிழ்வுடன் வாழ்வதையே விரும்புவான். அதையறியாவர்கள் தான் நேர்த்திக்கடன் என கதைக்கின்றனர்” என்றார் கதிரேசன்.

“அப்படியா ஐயா, நீங்கள் நடமாடும் சிவன். எதைக் கேட்டாலும் பதில் சொல்வீர்கள். இன்று நான் பகல் உணவை உண்டுவிட்டு, சிவநினைவுடன் கண்ணயர்ந்தேன். அப்போது காளை மாட்டில் வந்த சிவன் எனது தலைமீது தனது மலர் போன்ற திருவடியை வைத்தான். திடுக்கிட்டு எழுந்தேன். சிறிது நேரத்தில் ஓர் ஆடம்பர மோட்டார் வண்டி எனது சிறு குடிசை முன் வந்து நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கி வந்தனர். வந்த பெண்ணைப் பார்த்தால் அம்மை போலவும், வந்த ஆணைப் பார்த்தால் அப்பன் போலவும் எனக்குத் தெரிந்தது. அவர்களை இரு கை கூப்பி வணங்கினேன். மூன்றாவது மகள் ஆரணி வந்து அவர்களை அழைத்துச் சென்றாள். அவர்கள் நடந்து கொண்ட விதத்தில் இருந்து அவர்கள் பழக்கப்பட்டவர்கள் என்று உணர்ந்தேன்.”

“ஐயா, எனது பெயர் சிவலிங்கம். மனைவியின் பெயர் வரலட்சுமி. உங்களது மகள் ஆரணி எனது மகனுடன் பல்கலைக்கழகத்தில் படித்தவள். அப்போதிருந்து நாம் உறவினர்கள் போலப் பழகி வருகிறோம். எனது மகன் பொறியியலாளன்.

அமெரிக்காவில் தொழில் செய்கிறான். அவன் உங்களது மூன்றாவது மகளைத் திருமணம் செய்ய விரும்புகிறான்” என்றார். அப்பொழுது என் நிலையை நான் மறந்து விட்டேன். சிவனின் அருட்செயலை நினைக்க எனது உணர்ச்சிகள் பொங்கி எழுகின்றன. கண்கள் கலங்குகின்றன. மாணிக்கவாசகரைப் போல நானும் தெள்ளேணம் கொட்டப் போகிறேன்” என்று கூறியவாறு ஆடத் தொடங்கினான்.

“சிவராசா, மயில்வாகனத்தைப் பார். அவனது நிலையை உணர். நீ ஆடப் பாட வேண்டாம். உனது மனதைச் சுத்தப்படுத்து அது போதும்” என்றார் கதிரேசன்.

**கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்**

**அறம்பாவ மென்றிரண்டச் சந்தவிர்த்தென்னை ஆண்டு**

**கொண்டான் மறந்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ணம்**

**நல்கிய அத்திறம் பாடல்பாடிநாம்தெள்ளேணங் கொட்டாமோ. 08**

“சிவராசா, ஓலைக் காற்றாடி சுழல்வதுபோல இந்த உடல் பிறந்து இறக்கிறது. புண்ணியம் பாவம் என்னும் இரு வினைகளை உடலே செய்கிறது. இதிலிருந்து சிவன் என்னைக் காப்பாற்றினான். பின் அவன் தன்னை மறவாது இருக்கும்படி ஆக்கினான். அந்தப் பெருமையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்” என்கிறார் மாணிக்கவாசகர். எம்மால் செய்யப்படும் நல்வினையும் தீவினையும் தான் எம்முயிரோடு சேர்ந்து எம்மை இன்பப்படுத்துகின்றன, துன்பப்படுத்துகின்றன. நன்றாகப் படித்தவர்கள் கூட நல்வினை செய்வதில்லை. தீவினைகளையே விரும்பிச் செய்கின்றனர். நல்வினை செய்யும்போது இன்பம் தராது. துன்பத்தையே தரும். பின்நாளில் துன்பங்களை அகற்றி பேரின்பத்தைத் தரும். ஆனால் தீவினை செய்யும்போது இன்பத்தை தரும். பின் தீராத துன்பத்தைத் தரும். தாமோதரன் சிவபாலனின் வர்த்தக நிலையத்தில் சிப்பந்தியாக வேலை செய்தவன். தாமோதரன் அவனை அளவுக்கதிகமாக நம்பியவன். அதனால் அவன் சிவபாலனின் பொருளை சிறுகச் சிறுக களவெடுத்துத் தான் தனித்து வியாபாரம் செய்தவன். ஆரம்பத்தில் அவனது வாழ்வு சிறந்தது. பின்பு மின்ஒழுக்கால் வர்த்தக நிலையம் எரிந்து சாம்பரானது. ஒரேயொரு மகள் அவள் கணவனால் வெறுக்கப்பட்டு தாமோதரனோடு வந்திருக்கிறாள். அவன் இன்னொரு திருமணம் செய்துவிட்டான். கடன் கொடுத்தவர்கள் தாமோதரனை நெருக்குகின்றனர். அவன் செய்வதறியாது சிவன் கோவிலில் வந்திருந்து அழுகிறான். தான் சிவபாலனுக்குச் செய்த துரோகம் தான் தன்னை வாட்டுகிறது என்று புலம்புகிறான். இது

உனக்குத் தெரியும். நாம் செய்யும் நல்வினையும், தீவினையும் வித்துப் போல இருந்து முளைத்துப் பயன் தரும். பயனில் இருந்து யாரும் தப்ப முடியாது. அதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் தன்னைச் சார்ந்து சொல்கிறார்" என்றான் கதிரேசன்.

**கல்நா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினால்**

**பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி**

**மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்**

**தென்னா தென்னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. 09**

மயில்வாகனம் ஆடிப் பாடியவாறு சொன்னான்; "ஐயா கல்லுப்போல இருந்த எனது மனதை உருக்கி நாராக உரித்துத் தனது சிந்தனைகளைப் புகுத்தி என்னை ஆட்கொண்ட சிவனை, மின்னலைப்போல இடையையும், சிவந்த வாயையும், வெண் பற்களையும் உடைய அழகிய கன்னிப் பெண்களே சிவனைத் தென்னவனே போற்றி போற்றி என்று வணங்கி ஆடிப் பாடித் தெள்ளேணம் கொட்டுங்கள்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். அதனால் அவர்களோடு சேர்ந்து நானும் ஆடிப்பாடுகிறேன். தேடுவாரற்ற நாயாய்க் கிடந்த எனக்கு இந்திரலோகப் பதவியைத் தந்து எனது பிள்ளைகளை உமாதேவி அம்மையைப் போலக் காத்து அருளி வாழ வைத்த சிவனை ஆடிப் பாடி வணங்குவது பிழையா?" என்று கேட்டான் மயில்வாகனம்.

"சிவராசா, மயில்வாகனத்தைப் பாா. ஏழ்மையானவன். தனக்குச் சிவன் இந்திரனைப் போன்ற வாழ்வைத் தந்துள்ளான் என்று சொல்கிறான். இது அளவற்ற சிவநினைவால் வந்த நிலை. நீ அந்த நிலைக்கு வரவேண்டாம். பற்றுக்களை அறுத்துவிட்டு எல்லாம் சிவன். அவன் எனது துன்பங்களைப் போக்குவான் என்று உள்ளன்போடு நினை. உனது துன்பங்கள் யாவும் தீரும்" என்றார் கதிரேசன்.

ஆடிப் பாடிக் கொண்டிருந்த மயில்வாகனம் கதிரேசனை வணங்கிவிட்டு, "சிவராசா ஐயாவும் உங்களோடு இருக்கிறார். அவருக்குச் சிவனில் நம்பிக்கை இல்லை. தான். பெரியவன் என்ற நினைப்பு. "வாமதேவனின் மகன் உனது மகளோடு படித்தவன். அவன் உனது மகளை விரும்பி உனது மகளிடம் தனது விருப்பத்தைத் தெரிவிக்க, அவள் தனது காலில் இருந்த செருப்பால் அடித்தவள் அவனுக்கு உனது மகள் மீது

தீராத மோகம் அதனால் திருமணம் செய்யாது இருக்கிறான் உனது மகளை அவனிடம் மன்னிப்பு கேட்கச் சொல் நான் சிவனிடம் சொல்லித் திருமணத்தை முடித்து வைக்கிறேன்" என்ற மயில்வாகனம் 'சிவனே' என்று அன்புடன் அழைத்துவிட்டு கதிரேசனின் வளவில் இருந்த சிவலிங்கத்தின் முன்னால் அமர்ந்தான்.

"மயில்வாகனத்தின் வாய்ச்சொல் பலிப்பதாக ஊரவர் சொல்வார்கள். உனது மகளை மன்னிப்பு கேட்கச் சொல் பிறகு நடப்பதைப் பார்ப்போம்" என்றார் கதிரேசன்.

வாமதேவனுக்கும் சிவராசாவுக்கும் வர்த்தகத்தில் போட்டி இருந்தமையால் தான் சிவராசாவின் மகள் வாமதேவனின் மகனை அடித்தவள். இப்போதும் அவனைக் கோபத்துடன் ஏசுபவள். அவள் சம்மதிப்பாளா…..?" என்று யோசித்தார் சிவராசா.

"பணிந்து போபவன் ஒருபோதும் தாழ்வடைவதில்லை. உனது மகளின் நடத்தையைப் பற்றி ஊருக்குத் தெரியும். அத்துடன் ஊரவர்களை நீ பகைத்தமையால் பேசி வரும் சம்பந்தங்கள் குழப்பப்படுகின்றன. இது ஒரு நல்ல சந்தர்ப்பம் சிவன் உனக்குத் தந்துள்ளார். யோசித்துச் செய்" என்றார் கதிரேசன்.

**கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்**
**புனவே யனவளைத் தோளியோடும் புகுந்தருளி**
**நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்து நெஞ்சம்**
**சினவேற்கண்ணீர் மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 10**

மயில்வாகனம் வந்து சிவராசாவுக்குச் சொன்னான்; "மனிதர்களில் பலருக்குத் தாம் தேவர் என்ற நினைப்புண்டு. தேவர்கள் தாம் விரும்பியபடி இன்பமாக வாழ்கின்றனர். அதற்குத் தமது வலிமை தான் காரணமென்று நினைக்கின்றனர். அவர்களால் சிவபெருமானைக் கனவில் கூடக் காணமுடியாது. தாம் தேவர் என்று நினைக்கின்ற மனிதர்களாலும் சிவபெருமானைக் கனவிலும் காணமுடியாது. அதற்கும் காரணம் என்னவென்றால் அளவுக்கு மிஞ்சிய திமிர். திமிருள்ளவன் கடவுளை மட்டுமல்ல எதையும் காணமாட்டான். அவன் தன்னிடமுள்ள பணத்தையும் தன்னையும் மேலானவை என்று நினைத்து அகங்காரப்படுவதால் மானம் மரியாதையையும் இழக்கின்றான். மன்னிக்கத் தெரிந்தவன், தனது தவறைத் தவறு என்று உணர்ந்தவன் மற்றவர்களால் மேலானவன் என்று நினைக்கப்படுகிறான். சிவனின் அன்புக்குரியவனாகிறான்.

மாணிக்கவாசகர், “தேவர்களால் கனவிலும் காணமுடியாத சிவன் அம்மையோடு தன்னைத் தேடி வந்து என்னைத் தழுவி ஆட்கொண்டான். தீமையைக் காண வெறுக்கின்ற கண்களினின்று அவனை விரும்பிக் கண்ணீர் சிந்தித் தெள்ளேணம் கொட்டுவோம்” என்கிறார். வாமதேவனின் மகன் நடேசன் சிவபக்தன். அவனது தந்தையான வாமதேவனும் சிவபக்தன். அவன் ஆரம்பத்தில் நடேசனின் மனதில் இருந்து உனது மகளின் நினைவை நீக்கிவிடு என்று சிவனை வணங்குபவன். இப்போ உனது மகளின் மனதில் நடேசனை இருத்து என்று வணங்குகிறான். ஏன் என்று நான் கேட்டதற்கு “எல்லோரையும் சிவன் தான் படைத்தான். கொடிய நஞ்சுள்ள பாம்பை ஆபரணமாக அணிந்த சிவன் கொடியவர்களையும் திருத்துவான்; என்றவர். முன்வினைப் பயன் போலும் உனது மகளின் நினைவாக நடேசன் வாழ்கிறான். எனது மகளுக்கு மாப்பிள்ளை தேடமுடியாது. ஏனென்று உனக்குத் தெரியும். தீமையைக் காண கண்கள் வெறுக்க வேண்டும். தீயதைப் பேச நா மறுக்க வேண்டும். தீயதை நினைக்க மனம் அஞ்ச வேண்டும். இதுதான் மாணிக்கவாசகசுவாமிகளின் எண்ணம். நடேசன் சிவன் நினைத்தபடி நடக்கட்டும் என்று வாழாதிருக்கிறான். நான் சிவனின் சார்பாகச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நல்வாழ்வு கிடையாது. ஒருவன் தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பதன் மூலம் உயர்வடைவான். மதிக்கப்படுவான். வாயால் சிவநாமத்தைச் சொல்லிக் கொண்டும், கைகளால் அவனை வணங்கிக் கொண்டும் மனதால் யாரைக் கெடுக்கலாமென்று சிந்தித்துக் கொண்டிருப்பவன் நரகத்தில் படிப்படியாக விழுந்து கொண்டிருக்கின்றான்” என்றான் மயில்வாகனம். அவனது பேச்சைக் கேட்டு வியந்து போனார் கதிரேசன்.

**கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்எனைக்கலந் தாண்டலுமே**

**அயல்மாண்ட ருவினைச் சுற்றமுமாண்ட வனியினமேல்**

**மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய**

**செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 11**

“சிவனை நினைப்பவர்களுக்குச் சிவனின் நினைவைத் தவிர வேறு எந்த நினைவும் வரப்படாது என்று மாணிக்கவாசகசுவாமிகள் கூறுகிறார்” கௌரி சங்கரன் என்னைத் தன் மயம் ஆக்கியதும் எனக்கு உற்றார், வேற்றார் என்ற வேற்றுமைகள் யாவும் அகன்று விட்டன. உலகப்பற்று ஒழிந்தது. அவனது புகழைப் பேசுவதன்றி வேறு பேச்செல்லாம் ஒழிந்துவிட்டது. என் சொல் என்பதெல்லாம் இவன் செயல்களாக மாறிவிட்டன. இந்த மகிமையைப் பாடி தெள்ளேணம் கொட்டுவோம்” என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். அது உண்மை. ஏனென்றால் இப்போது எனக்கு வேற்றார்,

உற்றார் என்ற வேற்றுமை நீங்கிவிட்டது. இல்லாவிடில் நான் உன்னோடு பழகியிருக்கமாட்டேன். எனது மூத்த மகளின் திருமணத்தைக் குழப்ப எவ்வளவு முயற்சிகள் எடுத்தாய். எதுவும் பலிக்காததால் அவள் ஒருவனைக் காதலித்து அவனோடு சென்று சில காலம் வசித்தவள் என்றும், அதன் பின் அவன் கை விட்டு விட்டானென்றும் நா கூசாமல் சொன்னாய். அதை அவர்கள் நம்பவில்லை, "எல்லாம் சிவன் செயல். அப்படி ஒரு குறைபாடுடைய பெண் தான் எனக்கு மருமகளாக வேண்டுமென்று சிவன் நினைத்திருந்தால் அதுதானே நடக்கும்" என்று மாப்பிள்ளையின் தகப்பன் சொன்னவர். "இதெல்லாம் எப்படி நடந்ததென்று எண்ணுகிறாயா" எமது குடும்பம் சிவக் குடும்பம். அதனால் எதையும் யாரும் செய்ய முடியாது. நான் கௌரிசங்கரனை வழிபடுபவன். அதனால் பிறருக்கு அவர்கள் எதிரியாக இருந்தாலும் கூடத் தீமை செய்தால் சிவன் பொறுக்கமாட்டான். உடனே என்னைத் தனது அடியார் என்ற இடத்தில் இருந்து நீக்கி விடுவான். அதனால் நான் யாரையும் உறவென்று கருதுவதில்லை. உறவென்று கருதினால் தானே விரோதி என்பவர் தோன்றுவார். ஆணவம் கொண்டவர்கள் புராணங்களில் அழிந்ததைக் கண்டாய். சிவானந்தனுக்குக் கெடுதி செய்த தாமோதரன் கோவில் வாசலில் இருந்து புலம்புவதைக் கேட்டிருப்பாய். அந்த நிலை வருமுன் உலகப்பற்றுக்களை ஒழி. அவனது புகழையன்றி வேறு பேச்சுப் பேசாதை. உன் செயலை அவனது செயலாக மாற்று. உனக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். நடப்பவையெல்லாம் நல்லவையாக நடக்கும்" என்றான் மயில்வாகனம். சிவராசா திகைத்துப் போனான். இவனது மகளின் திருமணத்தை நான் குழப்பியது எப்படி இவனுக்குத் தெரியும்" என்று யோசித்தான்.

**முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட**
**அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு**
**பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி**
**தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 12**

"சிவராசா, முனிவர்கள் பலர் பல காலமாக முத்தியடைவதற்காகச் சிவனை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் சிவபெருமான் தன்னை அன்புடன் வழிபட்ட யானைக்கு அருளிவிட்டு எதுவுமறியாது இருந்த என்னை வலிய வந்து ஆட்கொண்டருளினார். அதனால் பக்திக் கடலுள் மூழ்கிச் சோதிரூபமானவன் மகிழும்படி பாடி தெள்ளேணம் கொட்டுவோம்" என்று மாணிக்கவாசகசுவாமிகள் சொல்கிறார். சிவன்

தன் மீது மாசற்ற அன்பு கொண்டவர் யார் என்று தெரிந்த பின்புதான் அருள் செய்வான். முனிவர் கூட்டம் பல ஆண்டுகளாகச் சிவனை அடையத் தவம் செய்தபோதும் எதுவும் செய்யாது அவன் மீது மாசில்லா அன்பு கொண்ட மாணிக்கவாசகரை ஆட்கொண்டது போல எத்தனையோ பேர் பொங்கல் படைத்துப் பல இலட்ச ரூபா செலவு செய்து அபிசேகம் ஆராதனைகள் செய்யக் கூலிக்காரனாக வாழ்ந்து சிவனையே எவ்வேளையிலும் நினைத்திருந்த என்னையும், எனது குடும்பத்தையும் நல்ல வழியில் வாழவைத்துள்ளான். ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்பார்கள் என்று எனது மனைவி சொல்வாள். ஐந்து பெண்களைப் பெற்ற ஆண்டியான நான் அரசனாகப் போகிறேன். மூன்று பெண்கள் திருமணம் செய்துவிட்டனர். இரண்டு பெண்கள் பல்கலைக்கழகத்தில் கற்கிறார்கள். அவர்கள் கலியாணங்கட்டாவிட்டாலும் உயர்பதவி வகிப்பர். அவர்கள் கற்கும் கல்வி அதற்கு வழிவகுக்கும் என்பேன்".

"முனிவர்கள் பலர் பல வருடங்களாகத் தவம் செய்த போதும் யானை ஒன்று அவனை வணங்கியதால் அதற்கு அருள் செய்தவன் சிவன். முனிவர்கள் பற்றோடு தான் தவம் செய்கின்றனர். எந்த ஒரு முனிவனும் பற்றின்றித் தவம் செய்ததில்லை. முத்தியை விரும்புவதும் பற்றுத்தான். வல்லமைகளை விரும்புவதும் பற்றுத்தான். நீ சிவனுக்குக் காரணமின்றி அபிஷேகம் செய்யவில்லை என்று கூறு பார்ப்போம். ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும் அச்செயல் வெற்றி பெறவேண்டும் என்று அபிஷேகம் செய்கிறாய். உனது மகளுக்குத் திருமணமாக வேண்டுமென்று எத்தனை அபிஷேகங்களைச் செய்தாய். திருமணம் நடந்ததா? முனிவர்கள் தவம் செய்தது போலாகிவிட்டது உனது கிரியைகள். அதனால் பற்றுடன் வணங்காதே. எதையும் நினைக்காது வணங்கு. என்னென்ன எப்போது நடக்க வேண்டுமோ அப்போது சிவன் நடத்தி வைப்பான் என்று எண்ணு. அந்த எண்ணம் உன்னை ஈடேற்றும். இப்போ சிவன் அருளக் காத்திருக்கிறான். அதைப் பயன்படுத்து" என்றான் மயில்வாகனம்.

**பார்பாடும் பாதாளர் பாடும் விண்ணோர் தம்பாடும்**

**ஆர்பாடுஞ் சாரா வகையருளி ஆண்டுகொண்ட**

**நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்**

**சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 13**

"நிலவுலகிலோ பாதாள உலகிலோ அல்லது சுவர்க்கத்திலோ அல்லது வேறு எவ்வுலகின் கண்ணும் நான் சென்று பிறவாமல் என்னை ஆட்கொண்டருளிய

சிவனின் நேர்மையான திருவிளையாடலையும் பெருமையையும் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்" என்று மாணிக்கவாசகசுவாமிகள் சொல்கிறார். பிறப்பென்பது துன்பமானது. அதில் முதுமை என்பது நரகமானது. ஐயா, எனது தந்தையின் தம்பியாருக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களை அவர் மிகவும் அன்பாக வளர்த்தார். நன்றாகக் கற்பித்தார். நல்ல நல்ல இடங்களில் திருமணம் செய்து வைத்தார். மூத்தவன் வெளிநாடொன்றிற்குச் சென்று நல்ல உத்தியோகம் பாாத்தான். அதனால் அவன் மனைவி ஏனைய சகோதரங்களோடு பெருமை பேச ஒவ்வொருவராக மிகுதியாக இருந்த நான்கு பேரும் வெளிநாட்டுக்குச் சென்று விட்டனர். இப்போ சித்தப்பா கடும் நோயாளியாகி விட்டார். படுத்த படுக்கையில் இருக்கிறார். அவரைப் பார்த்த எனது சிறிய தந்தையாரும் இறந்துவிட்டார். பிள்ளைகள் வந்து ஒருவனைக் கூலிக்கு அமர்த்திப் பார்த்தனர். பார்த்தவன் இவரது தொல்லைகளைத் தாங்கமுடியாது சென்று விட்டான். பின் முதியவர்களைப் பராமரிக்கும் ஓர் இல்லத்தில் சேர்த்தனர். அதுவும் சரிவரவில்லை. இப்போ எனது வீட்டில் இருக்கிறார். அவர் படும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாத நோயோடு சர்க்கரை வியாதி இருக்கு. இரத்த அழுத்தம் இருக்கு. பெருந் துன்பப்படுகிறார். பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்று அடம்பிடிக்கிறார். அவர்கள் வருவதாக இல்லை. "சிவனே வாழ்வில் நான் பட்ட துன்பம் போதும் என்னை அழைத்துச் செல் என்று தினமும் திருவாசகம் பாடுகிறார். அதை நினைக்க எனக்கு வேதனையாக உள்ளது. பிறப்பின் துன்பம் தெரிகிறது. அப்படியான துன்பம் எல்லோருக்கும் வரும் என்று யாரும் நினைப்பதில்லை. தாம் இறக்கும் வரை இளமையோடு இருப்போம் என்று தான் பலரும் நினைக்கின்றனர்" என்றான் மயில்வாகனம்.

**மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே**

**நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்**

**பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவாகத்தால்**

**சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 14**

கதிரேசன் சிரித்தார்; "இப்போ மயில்வாகனம் பெரிய அறிவாளியாகி விட்டான் உலகைப் புரியத் தொடங்கி விட்டான். வாழ்க்கையின் தத்துவத்தை அறிந்து விட்டான். ஆனால் வாழ்க்கை என்ற புதிரை எப்படி விடுவிப்பது என்று அறிந்தானானால் அவன் ஒரு ஞானியாகிவிடுவான். மகனே, பிற்காலத் தேவைக்கெனப் பலரும் பணம் பொருளைத் தேடி வங்கியில் வைப்பிலிட்டு விட்டு எமது இறுதிக் காலத்திற்கு அப்பணம்

வந்துதவும் என்று நினைக்கின்றனரே தவிர எமது வாழ்வு சிறக்க அருளைத் தேட வேண்டும் என்று நினைப்பவர்கள் குறைவு. தேவர்களாலும், சாத்திரங்களாலும் விளக்க முடியாத அதிசூட்சுமமான பொருள் சிவன். சித்சொரூபியாகிய அவன் என் மீது கருணை கொண்டு என்னிடம் வந்து எனது மனதை உருக்கி ஆட்கொண்ட பேரன்பாளன். அதனால் கண்ணீர் மல்க நாம் அவனைப் புகழ்ந்து பாடித் தெள்ளேணம் கொட்டுவோம் என்கிறார். சிவன் கருணை வள்ளல். பேரன்புடையவன். தன்னை நினைப்பவர்களின் துன்பங்களை அகற்றுபவன். உனது சித்தப்பா பெரும் பணக்காரர். கடவுளில் நம்பிக்கை இல்லாதவர். மனைவியோடு வாழுங்காலத்திலும் பல பெண்களுடன் தொடர்பு வைத்தவர். பணத்திற்காக எல்லோரும் தனக்குச் சேவகம் செய்வார்கள் என்று நினைத்தவர். பணம் இருந்தால் அப்படித்தான் நினைக்கச் செய்யும். அருள் இருந்தால் பணம் இல்லாவிட்டாலும் பண்பு மற்றவர்களைக் கவரும். சின்னத்துரை பெரும் சிவபக்தர். பெரும் பணக்காரரல்ல. அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். ஊரில் நல்ல உத்தியோகம் பார்க்கின்றனர். அவர்களை மனைவிமார் வெளிநாடு சென்று உழைக்குமாறு பணிக்க அவர்கள் அப்பா இல்லாத காலத்தில் தான் செல்வோம் என்றவர்கள். சின்னத்துரை மத்தியானம் சாப்பிட்டு விட்டுச் சுருட்டுப் பற்றிக் கொண்டு சாய்வு நாற்காலியில் படுத்திருந்தவர். மூத்த மகன் வேலை முடிந்து வந்து ஒரு நாளும் அப்பா இவ்வாறு படுப்பதில்லை என்று எண்ணி அவரை எழுப்பச் சென்றபோது தான் மரணமானது தெரிய வந்தது. முழுமையான சிவனடியார்களை முதுமையில் துன்பப்பட சிவன் விடமாட்டான். இதை உணரவேண்டும் என்று கதிரேசன் சொல்ல மயில்வாகனம் சொன்னான்; "ஐயா செய்த வினையை அனுபவிக்கத்தானே வேண்டும்".

கதிரேசன் சிவபக்தர் பின்பு சொன்னார்; நீ முழுமையான சிவபக்தன். எல்லாம் அறிந்துள்ளாய்" என்றார்.

**உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு**

**பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை**

**மருவித் திகழ்ந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்**

**திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 15**

"சிவராசா, சிவனின் கருணை என்பது கடலைப்போலப் பெருகுவது. மயில்வாகனத்தைப் பார் சிவனோடு: இருப்பதால் அவனுக்கு எந்தக் குறையும் இல்லை" மூன்று வேளையும் நல்ல உணவு கிடைக்கிறது. உடை கிடைக்கிறது. தங்கப்

பாதுகாப்பான வீடு உண்டு. எனக்கு என்ன குறை. எனக்கென்று ஒதுக்கப்பட்டவை தவறாது கிடைக்குது. தேவையேற்படும்போது தேவையைச் சிவனைக் கேட்டால் தந்துதவுவான். இப்போ எனது பிள்ளைகள் சிவனருளால் மன்னர்களைப்போல வாழ்கிறார்கள். அதனால் கேட்காமலே உதவிகள் கிடைக்கும்" என்று சொல்வான். தனக்கு உதவியாக மாணிக்கவாசகரை அழைத்து வருவான்; "ஐயா, சிவலோகத்தில் மனம் உருகவும், விரிவடையவும், சாந்தியடையவும் செய்கிறது. அவனுடைய அகன்ற கருணையை அனுபவித்துப் பரமானந்தம் அடைகின்றேன். இந்த ஞானச் செல்வத்தைப் புகழ்ந்து நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்கிறார் மாணிக்கவாசகசுவாமிகள். அவர் சிவநினைவால் மனமுருகித் தனது அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார். அந்த இன்பம் எனக்குக் கிடைக்கிறது. "ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்றுவிட்டாய். என்ன செய்யப்போகிறாய். தினமும் சிவன்கோவிலைக் கூட்டிக் கழுவிக் கொண்டிராது கடுமையாக உழை. உழைக்காமல் விட்டுவிட்டு எனது மகன்மாரைச் செய்யும்படி கேளாதே" என்று எனது சகோதரி சொல்வாள். நான் சிவத்தொண்டு செய்தமையால்தான் இப்படிச் சிறப்பாக வாழ்கிறேன். சிவன் வாழும் எனது மனதில் துன்பம் இல்லை. அளவிட முடியாத இன்பமும், நிம்மதியும், சாந்தியும் கிடைப்பதால் 'நான் பரமானந்தப் படுகிறேன்' என்று சொல்வான். அது உண்மை எனது வாழ்வில் நான் துன்பப்பட்டது இல்லை. ஒரு துன்பம் வந்தால் பத்துப்பேர் உதவக் காத்திருப்பர். அப்படி எனது வாழ்க்கையைச் சிவன் அமைத்துத் தந்துள்ளான். நான் யாருக்கும் புத்திமதியோ, ஆலோசனையோ கூறுவதில்லை. இன்று நீ கவலைப்பட்டமையால் சொன்னேன். மயில்வாகனம் சொன்னதுபோல உனது மகளை அனுப்பிக் கணேசனிடம் மன்னிப்புக் கேட்கச்சொல். ஒருவரின் விருப்பமில்லாது நாம் செயலில் இறங்கக்கூடாது" என்றார் கதிரேசன்.

**புத்தன் புரந்தராதி யர்அயன்மேல் போற்றிசெயும்**

**பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த**

**அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்**

**சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. 16**

அப்போது அங்கே நல்லைநாதனும் மகாலிங்கமும் வந்தனர். சிவராசா கதிரேசனோடு கதைத்துக் கொண்டு நின்றது நல்லைநாதனுக்குப் பிடிக்கவில்லை. சில தினங்களுக்குமுன் சிவராசா நல்லைநாதனுக்கு வெறியில் சொன்னான்; "நீயும் கதிரேசனும் சிவனைச் சாட்டி ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறீர்கள். அதற்குச்

சுவாமியாரும் மயில்வாகனமும் உடந்தை. மயில்வாகனம் தனது அழகான பெண்களைக்காட்டி நல்ல இடத்தில் இரண்டு மாப்பிள்ளையைப் பிடித்துவிட்டான்" என்று சொன்னபோது நல்லைநாதன் மிகுந்த கோபத்துடன் சொன்னான். "நீ யாரை வேண்டுமானாலும் எதையும் சொல். சிவனைப் பற்றிக் கதைத்தால் கொலையும் செய்வன். உனக்குச் சிவனைப்பற்றி என்னடா தெரியும்? சிவன் எப்போதும் புதியவன். தேவர்கள் போற்றும் பித்தன் அவன். திருப்பெருந்துறையில் உள்ள அம்பலத்தில் அவன் அழகுடன் வீற்றிருக்கிறான். எனது பிறவிநோயைக் களைந்த அப்பன் அவன். அவனது அருள்வடிவமான திருவடிகள் என் உள்ளத்தில் புகுந்தன. நான் தெள்ளேணம் கொட்டிப் புகழ்கிறேன்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். கதிரேசனை விடு அவர் முதியவர். மயில்வாகனம் ஐம்பது வயதுள்ள நடுத்தர மனிதன். முதலில் அவனுக்கு இரட்டைப் பெண்குழந்தைகள் பிறந்தன. பின் வருடமொன்றுக்கு ஒவ்வொன்றாக மூன்று பெண்பிள்ளைகள் பிறந்தன. மூத்தவளுக்கு வந்த சம்மந்தத்தை நீ எத்தனை வசைமொழிகள் சொல்லியும் அது குழம்பாததற்குக் காரணம் மயில்வாகனத்தினது சிவபக்தி. நீ சிவனை வணங்குவதாக நினைத்து உனது குடும்பத்திற்கே தீமை செய்கிறாய். உன்னிடம் பணமிருக்கு, காணி பூமி இருக்கு. ஒரேயொரு அடங்காத பெண்பிள்ளை. அவளுக்குத் திருமணம் செய்து கொடுக்க உன்னால் முடியுமா…? முடியாது. ஏனென்றால் சிவனடியார்களைக் குற்றம் சொல்வது சிவனுக்குப் பிடிக்காது. இதை நீ எப்ப உணரப்போகிறாயோ தெரியவில்லை. என்னுடன் தொடர்ந்து கதைக்காதை. கதைத்தால் என்ன சொல்வன் என்று எனக்கே தெரியாது" என்றதும் சிவராசா சென்று விட்டான். இரண்டு நாட்களுக்கு முன் கேவலமாகக் கதைத்தவன் இப்போ ஏன் வந்திருக்கிறான் என்று யோசித்தான் நல்லைநாதன்.

"நான் வரப்போறன் அண்ணை" என்றான் சிவராசா.

"உன்னைப்போலச் சந்தர்ப்பவாதியல்ல நான். என்ன தீய நினைவுடன் வந்தாயோ எனக்குத் தெரியாது. ஆனால் சிவபக்தர்களுக்கு யாராலும் தீங்கிழைக்க முடியாது. நீ வந்த வேலையை முடித்துவிட்டுப் போ. வா மகாலிங்கம் பிற்பக்கம் போவோம் என்று நல்லைநாதன் எழுந்து செல்ல மகாலிங்கம் அவனுக்குப் பின்தொடர்ந்து சென்றார்.

**உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்**

**சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்**

**கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்**

**செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 17**

எழுந்து சென்ற மகாலிங்கம் வந்து கதிரேசனுக்குச் சொன்னான்; “அண்ணை, உவனைத் திருத்த முடியாது, அத்துடன் நம்பவும் முடியாது. நேற்று வடக்கில் ஒரு சாமியார் வந்திருந்து உபதேசம் செய்கிறார். அச்சடித்த நூல்களும் கொடுக்கிறார்” என்று கூறிய நல்லைநாதன் ஒரு நூலை எடுத்துக் கதிரேசனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னார்; “இதில் சிவனைப்பற்றி மிகவும் கேவலமாக எழுதப்பட்டிருக்கு. பூபாலன் இதைப் படித்துவிட்டுச் சாமியாருக்கும் கூட வந்தவர்களுக்கும் பொல்லால் அடித்தவன். அதை இவர் தடுத்தவர். பிறகெப்படி இவரை நம்புவது, “பொய்ச்சமயங்களும், முரண்படுகின்ற நூல்களும் மனக்குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன. அதனால் தடுமாறிய மனதைத் தடுத்து அக்கவலைகளை ஒழித்து சிவன் என்னை ஆட்கொண்டான். அவனது பெருமைமிக்க அச்செயலைப் புகழ்ந்து தெள்ளேணம் கொட்டப்போகிறேன்.” என்று மாணிக்கவாசக சுவாமியார் சொல்கிறார். அவருக்கே பொய்ச்சமயவாதிகளாலும், நூல்களாலும் மனம் தடுமாறியதென்றால் சாதாரண மக்களின் நிலை என்று கேட்டுக் கேட்டு அடித்தவன். சிவராசாவும் அவனது நண்பர்களும் தடுக்க அங்கு ஒரு பெரும் கலகம் மூண்டுவிட்டது. நானும் மகாலிங்கமும் அவர்களைப் போகச் சொல்ல இவன் எம்மோடும் சண்டைக்கு வந்தான்” என்றான் நல்லைநாதன். கதிரேசன் எதுவும் பேசவில்லை. அந்தச் சம்பவத்தை உடனே பூபாலன் வந்து கதிரேசனுக்குச் சொல்லிவிட்டான். “நீ எதையும் செய். மக்களைக் குழப்பாதே” என்றார் கதிரேசன்.

**வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்**
**தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு**
**ஊன்கெட் டுயிர்கெட்டுணவுகெட்டென் உள்ளமும்போய்**
**நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 18**

“மகாலிங்கம்; உனக்கு யாவும் தெரியும். எல்லோரைப்பற்றியும் அறிந்து வைத்திருக்கிறாய். என்னைப்பற்றி உனக்குத் தெரியும். யாரையும் நான் வெறுப்பதில்லை. அது சிவனுக்குப் பிடிக்காது. ஒவ்வொருவரும் தமக்குச் சரியென்று நினைத்துத் தீயசெயல்களை அஞ்சாது செய்கின்றனர். அதனால் பெரும் துன்பங்கள் வந்தபோதும் அதனால் கவலை கொள்வதில்லை. தனது செயல்களால் தான் தனக்குக் கேடு வருகிறது என்று படித்தவர்கள்கூட உணர்கிறார்களில்லை. சிறிது நேரத்திற்கு முன் மயில்வாகனம் சிவராசாவின் மகளை நடேசனிடம் சென்று மன்னிப்புக் கேட்கச் சொன்னவன். அவனது வாய்ச்சொல் பலிக்கும் என்று நீயே சொல்வாய். அப்படியிருந்தும்

சிவராசா அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. எது நடக்குமோ அதுதான் நடக்கும் என்று நம்புபவர்களை நாம் திருத்த முடியாது. எது நடக்க வேண்டுமோ அதை முயற்சித்துப் பார்ப்போம் என்று நினைக்கச் சிலரால் முடியாது. அவர்களின் அகந்தை அதற்கு இடம் கொடாது. பஞ்சபூதங்களும் அவற்றால் ஆகிய பிரபஞ்சங்களும் பிரளயத்தில் ஒடுங்கும்போது சிவன் இருந்தபடியே இருப்பான். சீவன் தோன்றா நிலைக்குச் செல்வான். முத்தியில் சிவத்தில் கலக்கிறான். இதைத் தெரிந்து கொள்ளாதவர்களுக்கு யார் எதைச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். பட்டும் உணரமாட்டார்கள்" என்றார் கதிரேசன்.

**விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து**

**மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்**

**கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்**

**தென்னா தென்னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. 19**

"மகாலிங்கம் எல்லா உலகங்களுக்கும் மூலமானவன் சிவன். அவன் எனக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றி அருள்புரிந்தான். அவனது பெருமையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்" என்கிறார் மாணிக்கவாசகர். ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் பல்வேறு அறிஞர்கள் வந்து ஆரோக்கியமான விடயங்களைப் பேசுகிறார்கள். பலர் வந்து கேட்கிறார்கள். அதைப் பின்பற்றுவது யார்? கோவில் திருவிழா முடிய ஆடும், மாடும், கோழியும், மதுவையும் தானே தேடுகிறார்கள். அப்படியானவர்கள் திருவிழாக்காலங்களிலும் அவற்றைத் தேடலாம் தானே. எல்லா உலகங்களுக்கும் ஆதிமூலமான சிவன் தன்னை அன்புடன் வணங்குபவர்களுக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றுவான். அது உனக்குத் தெரியும். அப்படிப்பட்ட நீ ஏன் தேவையில்லாத விடயங்களைப் பற்றிச் சிந்தித்துக் காலத்தை வீணாக்குகிறாய். பிழையானது என்று தெரிந்தும் அதனைச் செய்வோரைத் திருத்தமுடியாது. ஆகையால் வீணான விடயங்களைப்பேசி மனதைக் குழப்பாது மகிழ்வுடன் எல்லாவற்றையும் ஏற்று வாழப்பழகு. அது மிகவும் சிரமமானது தான். பழகினால் சரிவரும்" என்றார் கதிரேசன்.

**குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல் வளையாள்**

**நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்**

**அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற**

**சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 20**

“மகாலிங்கம் மாணிக்கவாசகசுவாமிகள் எதைச் சொன்னாரோ அதைச் சொல்வோம். எல்லா உலகங்களுக்கும் முதல்வனான சிவன் ஏனையவற்றைக் கவனித்துக் கொள்ளட்டும். “இறைவனது பெருமைகளைப் பாடுவோம். அவன் தலையில் அணிந்திருக்கின்ற கொக்கின் சிறகைப் பாடுவோம், உமாதேவியாரின் ஆட்சிமுறையைப் பாடுவோம். சிவன் நஞ்சு அருந்தித் தியாகத்தை நிலைநாட்டியதைப் பாடுவோம். தில்லையில் ஆடும் சிவனது திருநடனத்தைப் பாடுவோம். அவற்றை நினைத்துத் தெள்ளேணம் கொட்டுவோம்” என்கிறார். இதைவிட எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு பிறவியைத்தரும் விடயங்களை ஏன் சிந்தித்து மனதைக் குழப்புகிறாய்.” என்றார் கதிரேசன். அவர் இதைப் பலமுறைகூறியும் மற்றவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்று நினைத்தான் மகாலிங்கம்.

திருச்சிற்றம்பலம்.